இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
செவ்வாய்க்கிழமை 21.07.2026

# இதுவரை நடந்த தவறுகளுக்கு நடவடிக்கை என்ன?

சத்தியம் தவறாத உத்தமன் போல முதலமைச்சர் விஜய்யை உருவாக்க ஊடகங்கள் துடிக்கின்றன. 'இனியாராவது ஊழல் முறைகேடுகள் நடவடிக்கையில் ஈடுபட்டால் உங்கள் பதவியைப் பறித்து விடுவேன்' என்று அமைச்சரவைக் கூட்டத்தில் விஜய் மிரட்டியதாக தலைப்புச் செய்தி வெளியிட்டு ஊடகங்கள் கொண்டாடி இருக்கின்றன. அவர்களுக்குச் சொல்லி வர வைத்துள்ளது த.வெ.க. அரசு.

"உங்களிடம் யாராவது லஞ்சம் கேட்டால் கொடுக்க முடியாது என்று சொல்லுங்கள். உங்களுடன் நான் இருக்கிறேன். இதை மீறி யாராவது கட்டாயப்படுத்தினால் இது எங்க மகன், எங்க பிள்ளை, எங்க அண்ணன், எங்க தம்பி, எங்க விஜய், எங்கள் விஜய்யோட ஆட்சி என்று உறுதியாகச் சொல்லுங்கள் மக்களே" என்று உறுமினார் விஜய். **இது மாதிரி மேடைகளில் பேசுவது, அமைச்சரவைக் கூட்டத்தில் சொன்னதாக செய்திகளைப் பரப்புவது போன்ற டிராமாக்களின் மூலமாக காலத்தைத் தள்ளலாம் என நினைக்கிறார் விஜய்.**

அரசு வழக்கறிஞர் நியமனத்தில் லட்சக்கணக்கில் லஞ்சம் விளையாடி கோடிக்கணக்கில் பண முறைகேடுகள் நடந்துள்ளது என்று குற்றம் சாட்டியவர் த.வெ.க.வைச் சேர்ந்த பெண் வழக்கறிஞர். அவரைக் கட்சியை விட்டு நீக்கி இருக்கிறார் விஜய். **'ஒரு பெண்ணாகவும், தலித் சமூகத்தைச் சேர்ந்தவராகவும் நான் மேற்கொண்ட போராட்டம் தலைவர் அவர்களே உங்களுக்கு நேரடி பார்வைக்கு கொண்டு செல்லப்பட்டதா எனத் தெரியவில்லை?'** என்று விஜய்க்கு எழுதிய கடிதத்தில் வழக்கறிஞர் ஞானசௌந்தரி சொல்லி இருக்கிறார்.

விழுப்புரம் மாவட்டம் சாலாமேடு பகுதியை சேர்ந்தவரும், தமிழக வெற்றிக் கழகத்தின் வழக்கறிஞர் அணி இணை செயலாளருமான எம்.ஞானசௌந்தரி ஒரு வழக்கு தாக்கல் செய்துள்ளார். **"ஒரு அரசு வழக்கறிஞர் நியமனத்துக்கு 5 லட்சம் ரூபாய் முதல் 30 லட்சம் ரூபாய் வரை லஞ்சம் பெற்றுக்கொண்டு, அரசு வழக்கறிஞர்களாக நியமிக்கப்படு கின்றனர்; த.வெ.க. மாவட்டச் செயலாளர் மோகன்ராஜ் மற்றும் மாவட்ட ஆட்சியர் ஆகியோர் கூட்டுசேர்ந்தும், த.வெ.க. பொதுச் செயலாளரும், அமைச்சரு மான புஸ்ஸி ஆனந்த் பரிந்துரை அடிப்படையிலும், இந்த நியமனங்கள் நடந்துள்ளது"** என்று பகிரங்கமாகக் குற்றம் சாட்டி தனது வழக்கை பதிவு செய்தார். இந்த வழக்கு சென்னை உயர்நீதிமன்ற விசாரணையில் இருக்கிறது.

இந்த நிலைமையில் முதலமைச்சர் விஜய் என்ன செய்திருக்க வேண்டும்? அமைச்சர்கள் ஆனந்த், நிர்மல் குமாரை அழைத்து விசாரித்திருக்க வேண்டும். குற்றம் சாட்டுகிறவரும் த.வெ.க.வைச் சேர்ந்தவர் என்பதால் இரு தரப்பையும் உட்கார வைத்து விசாரித்திருக்க வேண்டும். அதைச் செய்யாமல் குற்றம் சாட்டியவரை கட்சியை விட்டு நீக்கி இருக்கிறார் முதலமைச்சர் விஜய். **இவர்தான் இந்த நாட்டில் லஞ்சம் ஊழலை ஒழிக்கப் போகிறாராம்?**

பழனி கோயிலுக்குச் சொந்தமான 100 கோடி மதிப்பிலான நிலத்தை ரூ.2 கோடிக்கு பத்திரம் போட்டு விற்பனை செய்து விட்டது த.வெ.க. அரசு. அறநிலையத் துறை அமைச்சர் ரமேஷுக்கு தெரியாமல் இவ்வளவு பெரிய முடிவு எடுக்கப்பட்டு இருக்காது என்பதை அனைவரும் அறிவார்கள். அங்கே இருப்பவரை மாற்றி, ஒருவரை கூடுதல் பணியாகக் கொடுத்து அவரை வைத்து இந்த சொத்து பறிமாற்றம் நடந்திருக்கிறது. இதற்கு பொறுப்பேற்க வேண்டியவர், திடீரென பதவி உயர்வைப் பெறுகிறார்.

**'அந்த நிலம் குறித்த தகவல் தெரியாமல் சொத்து பதிவு நடந்தது'** என்கிறார் அறநிலையத் துறை அமைச்சர் ரமேஷ். **'சொத்து விபரம் தெரிந்தே தவறு செய்துள்ளார்கள்'** என்கிறார் பத்திரப்பதிவு அமைச்சர் லோகேஷ் தமிழ்ச்செல்வன். இதில் யார் சொல்வது உண்மை என விசாரித்தாரா முதலமைச்சர் விஜய்?

அறநிலையத் துறை அமைச்சர் ரமேஷ் முழிக்கும் முழியே ஏதோ தவறு நடந்திருப்பதைக் காட்டிக் கொடுக்கிறது. இதுவரை யாரும் கைது செய்யப்படவில்லை. மோசடியாக பதிவு செய்து கொடுத்தவர்களோ, பதிவு செய்து கொண்டவர்களோ கைதாகவில்லை. உயர்நீதிமன்றம்தான், இப்பதிவை ரத்து செய்துள்ளது. விஜய் அரசு செய்யவில்லை. **'இனி முறைகேடு நடந்தால்...'** என்று வசனம் பேசும் விஜய், **அமைச்சர் ரமேஷை பதவி நீக்கம் செய்திருக்க வேண்டாமா?**

ஆட்சிக்கு வந்ததும் 700 டாஸ்மாக் கடைகளை மூடியதாக வேஷம் போட்டார் விஜய். இப்போது நாடு முழுவதும் உயர்ரக பார்கள் திறக்கப்பட இருக்கின்றன. தமிழ்நாட்டுக்குள் பல்வேறு மாநில மதுவகைகள் வர இருக்கிறதே? **இதன் பின்னணியில் இருப்பவர்கள் யார்?**

ஆட்சிக்கு வந்ததும் ஏராளமான கல்குவாரிகள் மூடப்பட்டன. இப்போது அதில் என்ன நடந்து கொண்டு இருக்கிறது? **கேரளாவுக்கு போகும் லாரிகள் நிறுத்தப்பட்டு லஞ்சம் பெறப்படுவதாக** கேரள மீடியாக்களில் வீடியோ காட்சிகள் வெளியானதே? அந்த விவகாரத்தில் யார் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது?

அமலாக்கத்துறை சோதனை காரணமாக கடந்த 31 மாதங்களாக மூடப்பட்டுக் கிடந்த **12 மணல் குவாரிகளை திறப்பதில் இந்த அரசு முனைப்புக் காட்டுவதன் பின்னணி என்ன?**

தனியார் பேருந்துகள் அறிவிக்காமலேயே **அனைத்துக் கட்டணங் களையும் உயர்த்தியதற்கு அனுமதி** வழங்கியது யார்?

**விஜய் ஆட்சி அமைந்தது முதல் மிகமிக மர்மமாக நடக்கத் தொடங்கி இருக்கும் ஒரு சில விஷயங்கள் இவை. வரிசையாக இவை வெளியில் வரும். உயர் மட்டத்தில் இருப்பவர்களால் மட்டும் அனுமதிக்கப்படுகின்றவை இவை. இதைப் பற்றி விளக்கம் அளிப்பாரா விஜய்? இல்லை என்றால் தனது வாய்ச் சவடால் உரைகளில் இதுபற்றி பேசத் தயாராக இருக்கிறாரா விஜய்?**

---

### இறையன்பன் குத்தூஸ் நிகழ்ச்சித் தொகுப்பு! வாகை சந்திரசேகர் தலைமை!

# தி.மு.க. கலை - இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை சார்பில் மறைமலை அடிகள் 150வது பிறந்தநாள் நிறைவுப் பெருவிழா!

### முனைவர் ம.இராசேந்திரன் – க.திருநாவுக்கரசு – பேராசிரியர் ஆ.இரா.வேங்கடாசலபதி – பொள்ளாச்சி உமாபதி – நே.சிற்றரசு சிறப்புரை!

சென்னை, ஜூலை 21 -

கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை சார்பில் தனித்தமிழ் இயக்கத்தின் தலைவர் மறைமலை அடிகளார் 150ஆவது பிறந்த நாள் நிறைவு பெருவிழா 18/7/2026 அன்று மாலை சென்னை ஓட்டல் ஜாக் கூட்ட அரங்கில் நடை பெற்றது .

விழாவுக்கு பேரவை தலைவர் வாகை சந்திர சேகர் தலைமை தாங்க, சென்னை மேற்கு மாவட் டச் செயலாளர் நே.சிற்ற ரசு முன்னுரை வழங்க, பேரவை செயலாளர் பொள்ளாச்சி உமாபதி வரவேற்புரை நல்கிட, பேரவைச் செயலாளர் கலைமாமணி இறையன் பன் குத்தூஸ் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார்.

விழாவில் தஞ்சை தமிழ் பல்கலைக்கழக மேனாள் துணைவேந்தர் முனைவர் ம. ராசேந்திரன், திராவிட இயக்க ஆய்வாளர் கா.திருநாவுக்கரசு, வர லாற்று ஆராய்ச்சியாளர் பேராசிரியர் வேங்கடாச லம் ஆகியோர் சிறப்புரை நிகழ்த்தினர்.

ஆயிரம் விளக்கு கிழக்கு பகுதி செயலாளர் மா.பா. அன்பு துரை, ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி செயலாளர் வினோத் வேலாயுதம், பேரவை துணைச் செயலாளர் எம் எஸ் ஹரிபாபு, கெம்மங் குப்பம் சி.கோபி, சென்னை மேற்கு மாவட்ட கலை, இலக் கிய, பகுத்தறிவுப் பேரவை அமைப்பாளர் திருமலை பொன்னுரங்கம் நன்றி கூறினர்.

விழாவில் தகவல் தொழில்நுட்ப அணியின் அமைப்பாளர் கோவி. லெனின், விஜயா தாயன் பன், தலைமை செயற்குழு உறுப்பினர் நுங்கை வி எஸ் ராஜ், மாணவர் அணி அமைப்பாளர் துபாய் விஜய், பொறியாளர் அணி அமைப்பாளர் அசோக், சென்னை தென் மேற்கு கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை அமைப்பாளர் சண்முகநா தன் மற்றும் சென்னை மேற்கு மாவட்டக் கழக நிர்வாகிகள் கலந்து சிறப் பித்தனர்.



தி.மு.க. கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை சார்பில் தனித்தமிழ் இயக்கத் தந்தை மறைமலை அடிகள் 150 ஆவது பிறந்த நாள் விழாவில் திராவிட இயக்க ஆய்வாளர் க.திருநாவுக்கரசு உரையாற்றினார். விழாவில் கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவைத் தலைவர் வாகை சந்திரசேகர் சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு தஞ்சை தமிழ்ப் பல்கலை கழக மேனாள் துணை வேந்தர் ம. இராஜேந்திரன், பேராசிரியர் ஆ. இரா.வேங்கடாசலபதி, பொள்ளாச்சி உமாபதி, இறையன்பன் குத்தூஸ், எம்.எஸ்.ஹரிபாபு, என்.எஸ்.மாதேஷ்வரன், ஆயிரம் விளக்கு கிழக்கு மேற்குப் பகுதி செயலாளர்கள் மா.ப.அன்புதுரை, வினோத் வேலாயுதம், திருமலை பொன்னுரங்கம் , சி.கோபி கலந்து கொண்டனர்.

---

### சார் பதிவாளரை விடுப்பில் அனுப்பியது யார்?

# பழனி கோவில் நில பத்திரப் பதிவை மூடி மறைக்க திசை திருப்புவதா?

### பத்திரப் பதிவு, வணிக வரித்துறை முன்னாள் அமைச்சர் பி.மூர்த்தி – த.வெ.க. அமைச்சர் நிர்மல் குமாருக்கு பதிலடி!

மதுரை, ஜூலை 21 -

தி.மு.க. அரசின் மீது பழி போடுவதை நிறுத்திவிட்டு மக்கள் நலத் திட்டங்கள் மீது கவனம் செலுத்த வேண்டுமென முன்னாள் அமைச்சர் வடக்கு மாவட்ட திமுக செயலாளர் பி.மூர்த்தி அமைச்சர் நிர்மல்குமா ருக்கு அறிவுரை கூறினார்.

மதுரை அய்யர்பங்களா வில் மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க. செயலா ளரும், முன்னாள் வணிக வரி மற்றும் பதிவுத்துறை அமைச்சருமான பி.மூர்த்தி செய்தியாளர்களை சந்தித் தார் அப்போது அவர் கூறி யதாவது:



தமிழ்நாட்டில் உள்ள கோவில் சொத்துகள், வக்பு வாரிய சொத்துக்கள், நீர் நிலை புறம்போக்கு சொத் துகள் இவை அனைத்தும் பதிவு செய்யக்கூடாது என ஒவ்வொரு சார்பதிவாளர் அலுவலகத்திலும் அந்த பகுதி சொத்துக்கள் தொடர் பான குறிபானை இருக் கும் அதை மீறி பதிய முடி யாது, பழனி முருகன் கோவில் சொத்து பதிவு விவகாரத்தில் அங்கு இருந்த சார் பதிவாளர் விடுப்பில் அனுப்பி வைக் கப்பட்டு பொறுப்பு சார்ப திவாளர் மூலம் பதிவு நடைபெற்று உள்ளது .

இது தொடர்பான கேள்விகளை தவெக அர சின் சட்டத்துறை அமைச் சரும், நிழல் முதலமைச்ச ருமான நிர்மல் குமாரிடம் செய்தியாளர்கள் கேட் டால் அவர் அதற்கு பதில ளிக்காமல் அதை திசைதி ருப்புவது போல கடந்த ஐந்தாண்டு கால திமுக ஆட்சி மீது பழி போட்டு வருகிறார்.

குறிப்பாக பத்திரப்ப திவு துறையில் ஒவ்வொரு பத்திரப்பதிவு அலுவலகத் திலும் நான் ஆட்களை நிய மித்து வசூலித்ததாக கூறுகி றார் இப்படி எந்தவித ஆதாரமும் இன்றி பொத் தம் பொதுவாக மக்களை திசை திருப்புவதற்காக தி.மு.க. மீது அவர் தொடர்ந்து பழி சுமத்தி வருகிறார் இது அவர் வகிக் கும் பதவிக்கு உகந்ததல்ல.

**கடந்த 5 ஆண்டில் ரூ.25 ஆயிரம் கோடி வருவாய்!**

தமிழ்நாட்டின் 589 சார் பதிவாளர் அலுவலகங்கள் உள்ளன இந்த அலுவலகத் தில் நான் அமைச்சராக இருந்தபோது எங்கு என் தலையீடு இருந்தது என் பதை ஆதாரத்துடன் அவர் கூற வேண்டும், கடந்த 2021 ஆம் ஆண்டு வரை அப்போதைய அதிமுக அர சில் பத்திர பதிவுத்துறை வருமானம் 10ஆயிரம் கோடி மட்டுமே. ஆனால் திமுக ஆட்சி பொறுப்பேற் றவுடன் கடந்த ஐந்தாண் டுகளில் பத்திரப்பதிவு துறையின் வருமானம் 2026 ஆம் ஆண்டு 25 ஆயி ரம் கோடி அளவிற்கு உயர்ந்திருந்தது. அதே போன்று வணிகவரித்து றையில் 94 ஆயிரம் கோடி யாக இருந்த வரி வருவாய் கடந்த ஐந்தாண்டு கால திமுக ஆட்சியில் தான் சுமார் ஒரு லட்சத்து 40ஆயிரம் கோடி வரை உயர்ந்தது இப்படி மக்கள், வணிகர்கள் பாதிக்கா வண் ணம் செயல்படுத்தி யுள்ளோம்

த.வெ.க. அரசில் ஒரு பைசா கூட லஞ்சம் இருக் காது என்றார்கள். ஆனால் கடந்த 60 நாட்கள் தொடர்ந்து பல்வேறு துறைகளில் லஞ்ச ஒழிப்புத் துறை போலீசார் அடிக்கடி சோதனை நடத்தி லட்சக்க ணக்கான பணங்களை பறி முதல் செய்து வருகின்ற னர்.

அதேபோன்று ஐந் தாண்டு கால ஆட்சியில் எந்த பத்திரப்பதிவு சம்பந் தமாகவும் சி.பி.சி.ஐ.டி. விசாரணை இருந்த தில்லை. இவர்கள் ஆட் சிக்கு வந்த ஆறு மாதத்தி லேயே பத்திரப்பதிவில் மோசடி நடந்ததாக புகார் எழுந்து தற்போது சி. பி.சி.ஐ.டி. விசாரணை நடைபெற்று வருகிறது .

**அரசு வழக்கறிஞர் நியமனத்தில் முறைகேடு!**

அதே போன்று சட்டத் துறை அமைச்சர் நிர்மல் குமாரின் துறையிலேயே அரசு வழக்கறிஞர்கள் நிய மிப்பதில் முறைகேடு என புகார் வந்த வண்ணம் உள் ளது. இது தொடர்பாக அவர்களது கட்சியைச் சார்ந்த வழக்கறிஞர் ஒரு வரே நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து அவர் தற்போது அக்கட்சியிலி ருந்து நீக்கப்பட்டுள்ளார். அதேபோன்று அரசு வழக் கறிஞர்கள் நியமனத்தில் தவெக கட்சியில் சேர்ந்த ஒரு சில தினங்களில் மாற் றுக் கட்சியினர் சிலர் அரசு வழக்கறிஞர்களாக நியமிக் கப்பட்டுள்ளனர். மதுரை யில் கூட இந்த சம்பவம் நடந்தேறி உள்ளது இது அனைத்தும் உலகறிந்த செய்தியாக உள்ளது ஆனால் அமைச்சர் நிர்ம ல் குமார் எதற்கெடுத்தாலும் தி.மு.க. அரசின் மீது பழி போடுவதிலேயே குறியாக உள்ளார்

ஒருவர் பொய்யை திரும்பத் திரும்ப கூறுவ தால் அது உண்மையாகி விடாது. அப்படி உண்மை யாய் விடக்கூடாது என்ப தற்காகவே தற்போது நான் செய்தியாளர்களை சந்தித் துள்ளேன்.

அமைச்சர் நிர்மல் குமா ரின் கட்டுப்பாட்டில் உள்ள மின்சாரத்துறையில் நாள்தோறும் மின்வெட்டு பிரச்சனை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இன் னும் மூன்று மாத காலங்க ளில் இந்த மின்வெட்டு என்பது அதிகரிக்க கூடும் என தகவல் வருகிறது. ஆனால் அதற்கு முன்னெச் சரிக்கை நடவடிக்கை அமைச்சர் எடுக்க வேண் டும். மின்வெட்டு பிரச்ச னையால் மக்கள் பாதிப்ப டைவதை தடுக்க இந்த தவெக அரசும் சம்பந்தப் பட்ட துறை அமைச்சரும் ஆக்கபூர்வமான நடவடிக் கைகளை எடுக்க வேண் டும். கடந்த தி.மு.க. ஆட்சி யில் எங்கேயும் மின் வெட்டு பிரச்சனையே இருந்ததில்லை.

**அதிகாரிகள் கடும் மனக்குமுறல்!**

மேலும் தற்போது மக் கள் பிரதிநிதிகள் மட்டு மின்றி அனைவரும் ஆய்வு என்ற பெயரில் அரசு அலு வலகங்களுக்கு செல்கின்ற னர், இதனால் அதிகாரிகள் கடும் மனக்குமுறலில் உள் ளனர், இப்படி இருக்க அமைச்சர் தொடர்ச்சியாக திமுக மீது பொத்தம் பொதுவாக எவ்வித ஆதா ரமும் இன்றி குற்றச்சாட்டு களை கூறி வருவதை நிறுத் திக் கொள்ள வேண்டும்.

**பல கட்சிகளுக்குச் சென்ற அமைச்சர்!**

அதேபோல் நான் கடந்த 48 ஆண்டு கால மாக தி.மு.க.வில் உறுப்பி னராகவும் அதில் கடந்த 26 ஆண்டுகளாக மாவட்ட செயலாளராகவும் ஒரே கட்சியில் மட்டுமே பய ணித்து வருகிறேன். அமைச்சர் நிர்மல் குமார் அப்படி அல்ல அவர் பல கட்சிக்கு சென்றவர்.

இவ்வாறு முன்னாள் அமைச்சர் பி.மூர்த்தி பேட் டியளித்தார்.

அமைச்சர் பேட்டியின் போது மாவட்டத் துணைச் செயலாளர், முன் னாள் எம் எல் ஏ ஆ.வெங்க டேசன், முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர் தமிழர சன், தலைமை செயற்குழு உறுப்பினர் கரு தியாக ராஜன் உள்ளிட்ட நிர்வா கிகள் உடன் இருந்தனர்

---

### த.வெ.க. ஆட்சியில் தலைநகர் சென்னையில் நாள்தோறும் கொள்ளை!

# சென்னை - நந்தனத்தில் தொடர் திருட்டு!

## மக்கள் பீதி!

சென்னை, ஜூலை 21 -

சென்னை மாநகரில் த.வெ.க. ஆட்சியில் நாள் தோறும் தொடர் கொலை, கொள்ளைகள் நடை பெற்று வருகின்றன.

சென்னை மாநகரில் மையப் பகுதியான நந்த னம் பகுதியில் பல்வேறு அரசு அலுவலகங்கள் வணிக மையங்கள், பங்களாக்கள் உள்ளிட்ட பல்வேறு குடியிருப்புகள் உள்ளன.

இதனால் இப்பகுதி மக்கள் நடமாட்டம் மிகுந்த பகுதியாகக் காணப்படுகிறது.

இந்நிலையில் இப்பகுதி யில் குறிப்பாக லோட்டஸ் காலனி (தாமரைக் குடியிருப்பு) ஒன்று, இரண்டு, மூன்றாவது தெருக்களில் நாள்தோறும் திருட்டுகள் நடைபெற்று வருகின்றன.

கடந்த ஒரு வாரத்தில் மட்டும் தொடர்ந்து மூன்று வீடுகளில் திருட்டு நடை பெற்று பொருட்கள் களவு போயுள்ளன. இதனால் இப்பகுதி மக்கள் மிகவும் அச்சம் அடைந்துள்ளனர்.